

# ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்

பாகம்-1

பாலகுமாரன்

# கிருஷ்ணாவதாரம்

ஊர் முழுவதும் வீட்டு வாசலில் கூடி நின்று குப்ஜை வீட்டிற்கு கிருஷ்ணர் போயிருக்கிறார் என்று பேசிக்கொண்டது.

குப்ஜை அவரை கட்டிலில் உட்கார வைத்தாள். சந்தனம் தடவினாள். துணிச்சலை வரவழைத்துக்கொண்டு தன்னோடு, கிருஷ்ணர் ரம்மித்து இருக்க வேண்டும் என்று பேசினாள்.

கிருஷ்ணர் மெல்ல அவள் தலையை தடவிக் கொடுத்தார். கன்னங்களை வருடி கொடுத்தார். அருகிலே அமர்ந்து தோளிலே கை வைத்து நெற்றியின் மீது நெற்றி தேய்த்தார்.

குப்ஜையின் உடலில் உஷ்ணம் பரவியது. இனம் புரியாத ஒரு மயக்கம் ஏற்பட்டது. ஒரு ஞானியினுடைய தீட்சை இது என்று தெரியாது, உள்ளே என்னவோ செய்கிறதே, ஏதோ எழுகிறதே, ஏதோ ஒரு வேகம் பிறக்கிறதே என்று குண்டலினி எழுச்சியால் அவள் தள்ளாடினாள்.

அடி வயிற்றிலிருந்து ஒரு வேகம் கிளம்பி, தொப்புளை அடைந்து, நெஞ்சை முட்டி, கழுத்தில் நின்று, முகம் முழுவதும் பரவி, நெற்றியில் ஆணி அடித்து, உச்சியில் பிளந்து வெளியே போயிற்று.

'அடேய், என்ன இது, என்ன இது. கிருஷ்ணா, என்னை என்ன செய்கிறாய்,' அவள் காரணமின்றி அழுதாள். கிருஷ்ணர் அவளை அணைத்துக் கொண்டார். அந்த அணைப்பில் குப்ஜையினுடைய குண்டலினி மிருதுவாக மாறியது. மூளைக்குள் ரத்த ஓட்டம் பாய்ந்தது.

"குப்ஜை இதுவல்ல வாழ்க்கை. ரம்மித்து இருத்தல் என்பது உடம்பு அல்ல. உடம்பு ஒரு கருவி. ஒரு கரண்டியால் பாயஸம் சாப்பிடுகிறோம். கரண்டியா ருசிக்கிறது. இல்லையே, பாயஸம் ருசிக்கிறது.

ஆனால் பாயஸத்தை எப்படி சாப்பிடுவது. கரண்டியால்தானே சாப்பிட முடியும். அதுபோல, அன்பு என்பதைச் சொல்ல உடம்பு என்பது ஒரு கருவி. அன்பு பாயஸம். உடம்பு கரண்டி.

ஆகவே, இந்த கரண்டியால் பாயஸத்தை பருகும்போது பாயஸத்தை நினைத்துக் கொள்வதா, கரண்டியை நினைத்துக் கொள்வதா. இரண்டையும்தான் என்று சொல்கிறாயா. தவறு.

பாயஸம் இல்லையேல் கரண்டியை தூக்கி எறிந்துவிடுவோம். அது ஏதோ ஒரு மூலையில் கிடக்கும். பாயஸம் இருப்பதால்தானே கரண்டிக்கு மதிப்பு. எனவே பாயஸமே முக்கியம்.

ரம்மித்திருப்பது என்பது உடம்பல்ல குப்ஜை. ரம்மித்திருப்பது என்பது மனம். மனம் ரம்மிக்க உடம்பு ஒரு வழி."

"உடம்பு இல்லாமல் மனம் மட்டுமே ரம்மிக்க முடியுமா."
"முடியுமே."
"எப்படி?"

"இப்பொழுது நீயும், நானும் என்ன செய்து கொண்டிருக்கிறோம். நாலு அங்குலம் இடைவெளி தள்ளித்தானே இருக்கிறோம். வெறுமே உன் தலையை தடவித்தானே இருக்கிறேன். நாம் ரம்மித்து இருக்கிறோமா, கூடி இருக்கிறோமா, இல்லையே.

ஆனால் உள்ளுக்குள்ளே நமது அன்பை பரஸ்பரம் எப்படி பரிமாறிக் கொண்டு விட்டோம். என் மீது எவ்வளவு பிரேமையாக இருக்கிறாய். உன்னை கண்டபோது எனக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது, ஆகவே எது ரம்மித்தது."

கிருஷ்ணர் கேட்க, இரண்டு கன்னங்களையும் பொத்திக்கொண்டு குப்ஜை அவரையே வியப்போடு பார்த்தாள். ஞானியின் வார்த்தையை, ஞானியின் அறிவுரையை அவர் நோக்கிலேயே அறிந்து கொள்வது என்பது ஒரு மாணவனின் முதல்படி.

குப்ஜை, மிகச் சிறந்த மாணவியாக, குண்டலினி சீறி எழுந்ததால் மனம் முழுவதும் கிளர்ந்து, மூளை வேலை செய்யப்பட்டு, மூளை தூண்டப்பட்டு அவள் கிருஷ்ணர் சொன்னதை உள்வாங்கிக் கொண்டாள்.

"ரம்மித்திருப்பது என்பது மனம். மனம் ரம்மிக்க துவங்கி விட்டது. இப்பொழுது உடம்பு எங்கு இருந்தால் என்ன. நாலு அங்குலம் தள்ளி இருந்தால் என்ன. நாலு காதம் தள்ளி இருந்தால் என்ன.

அல்லது நானூறு காதம் தள்ளி இருந்தால் என்ன. கிருஷ்ணர் உள்ளுக்குள்ளே வந்துவிட்டார், அவ்வளவுதானே, அது கிருஷ்ணருடைய இடமாகி போய்விட்டது அல்லவா.

ஆக, இப்பொழுது என்ன வேண்டும். சொல் குப்ஜை, என்ன வேண்டும்.

"எனக்கு உள்ளே வந்துவிட்டாய் கிருஷ்ணா. என் மனம் முழுவதும் நிரம்பி விட்டாய் கிருஷ்ணா. நீ நானாகிவிட்டாய். நான் நீயாகிவிட்டோம். இந்த கலத்தல் புரிகிறது கிருஷ்ணா. தயவு செய்து ஒரே ஒரு விண்ணப்பம் சொல்கிறேன் கேள்."

"என்னால் இனி பிரிவினையை தாங்க முடியாது. எனக்குள்ளே திடமாக மாறாது நீங்காது இருக்க வேண்டும். என்னை விட்டு ஒரு கணமும் அகலாது இருக்க வேண்டும்."

"ஆமாம் நான் இருப்பேன். நேசிப்பது என்பது மனதினுடைய செயல். மனதை நேசிப்புக்கு தூண்ட உடம்பு முயற்சிக்கிறது. வெறும் உடம்பை மட்டும் நினைத்துக் கொண்டிருந்தால் உடம்பினுடைய செயல் முடிந்ததும் நேசிப்பும் காணாது போய்விடும்.

ஒரு நேசிப்பை காணாது அடிப்பதில் யாருக்கு லாபம். எதற்காக செய்ய வேண்டும். எனவே, நிரந்தரமான ஒரு நேசிப்பிற்கு கிருஷ்ணர் சொல்லிக் கொடுத்ததும் குப்ஜை தெளிவானாள். எழுந்து அவரை வணங்கினாள்.

ஒவ்வொருவருக்கும் அவரவர் விதிப்படி, அவரவர் காலத்திற்கேற்றபடி, அவரவர் கர்மாவிற்கு ஏற்றபடி இந்த பாடம் நடத்தப்படும்.

குப்ஜை ஜென்ம ஜென்மமாய் இறை வழிபாடு செய்தவள். அவளுக்கு அந்த பாடம் நடந்து கனிந்துவிட்டது. இவர்களுக்கும் வரும். நிச்சயம் வரும். ஒருநாள் வரும்.

யாரெல்லாம் கிருஷ்ணரை தன்னுள் வரிக்கிறார்களோ, யாரெல்லாம் கிருஷ்ணரை தன்னுடைய பிராண சிநேகிதனாக நினைக்கின்றார்களோ,

யாரெல்லாம் கிருஷ்ணரை தன்னுடைய எஜமானனாக நினைக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் கிருஷ்ண ப்ரேமை வரும். கிருஷ்ணருடைய ஞானம் புரியும். அவர் சொல்வதும் விளங்கும்.